

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், கோவை மாநகர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் – தி.மு.க. மாநில தீர்மானக் குழுச் செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. நா.கார்த்திக் தனது புதல்வியின் திருமண வரவேற்பு விழா அழைப்பிதழை வழங்கினார்.

### பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்யக் கோரி

# பவானி அருகே விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!

ஈரோடு, ஜூலை 8 –

தமிழகம் முழுவதுமே விவசாயிகள் பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய கோரி கடந்த ஒரு மாத காலத்திற்கும் மேலாகவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தலில் அளித்த வாக்குறுதியின்படி கூட்டுறவு பயிர்க்கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்யக் கோரி, ஈரோடு மாவட்டம் பவானி அருகே உள்ள பெரியபுலியூர் கூட்டுறவு வங்கி முன்பு முழக்கங் கள் எழுப்பி விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேர்தல் வாக்குறுதியில் தமிழக விவசாயிகளுடைய கடன் முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்த தேர்தல் வாக்குறுதிப்படி செயல்படாமல் இரண்டு கட்டமாக சிறு, குறு விவசாயி களுக்கு ரூ.75 ஆயிரமும் பெரிய விவசாயிகளுக்கு ரூ.35 ஆயிரம் வரையிலான பயிர் கடன் மட்டுமே தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஈரோடு மாவட்டம் பவானி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி களில் உள்ள விவசாயிகள், தேர்தல் வாக்குறுதியில் அளிக்கப்பட்டவாறு சிறு, குறு விவசாயிகளின் பயிர்க்கடன்களை நிபந்தனை யின்றி முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடன் தள்ளுபடி கிடைக்காததால் விவ சாயிகள் பலர் மன உளைச்சலில் உள்ளதாகவும், இந்த விவகாரத்தில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

தற்போது இரண்டு கட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள தள்ளுபடி தொகையால் 20% விவசாயிகள் கூட பயனடைய மாட்டார்கள்.

எனவே பயிர் கடன் தள்ளுபடியை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

### இந்திய கிரிக்கெட் அணியின்

# முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனி பிறந்த நாள்!

## உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!



**சென்னை, ஜூலை 8 -**

**இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனி அவர்களின் பிறந்த நாளையொட்டி கழக இளைஞரணி செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.**

அதில், முன்னாள் இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் எம்.எஸ்.தோனி அவர்களுக்கு எனது இதயங்கனிந்த பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிரிக்கெட் மைதானத்திலோ, நிஜ வாழ்க்கையிலோ, எந்தச் சூழ்நிலையையும் நீங்கள் அமைதி, நிதானம் மற்றும் பணிவுடன் கையாளும் விதம் உண்மையிலேயே ஊக்கமளிப்பதாக உள்ளது.

நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடனும், மேலும் பல ஆண்டுகள் வெற்றிகளைப் பெற்று சிறக்கவும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள் என அவர் பதிவிட்டுள்ளார்.

### ‘அரசுப் பள்ளியில் ஆய்வு’ என்ற பெயரில் பள்ளிக் குழந்தைக்கு மன உளைச்சல் ஏற்படுத்திய

# அமைச்சர் கீர்த்தனா மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்கான தேசிய ஆணையத்தின் தலைவருக்கு – கழக எம்.பி. சல்மா கடிதம்!

**சென்னை, ஜூலை 8–**

**அரசுப் பள்ளியில் ஆய்வு என்ற பெயரில் பள்ளிக் குழந்தைக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்ட தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்கான தேசிய ஆணையத்தின் தலைவருக்கு, கழக மகளிரணி இணைச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான ராஜாத்தி என்ற சல்மா நேற்று (7.07.2026) கடிதம் எழுதி உள்ளார்.**

அவர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

பொது நலன் மற்றும் அக்கறையின் அடிப்படையில், தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் செல்வி. கீர்த்தனா, ஒரு மைனர் பள்ளி மாணவியை பொதுவெளியில் அவமானப்படுத்திய மற்றும் அந்தப் பிள்ளையின் அடையாளத்தை அனுமதியின்றி வெளிப்படுத்தியது , அடிப்படை உரிமைகள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்புச் சட்டங்களை மீறும் வகையிலான செயலாகும். மிகவும் கண்டிக்கத்தக்க இந்த செயல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகில் உள்ள திருத்தங்கல் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 02.07.2026 அன்று அமைச்சர் செல்வி. கீர்த்தனா ஆய்வு மேற்கொண்டபோது, அமைச்சர் ஒரு மைனர் பெண் மாணவியை பொது வெளியில் அவமானப்படுத்தியுள்ளார். மேலும், இச்சம்பவம் குறித்த காணொலிகள், குழந்தையின் அடையாளத்தை மறைக்காமல் சமூக ஊடகத் தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வருகின்றன. இந்த காணொலியை பொதுவெளியில் வெளியிடுவதற்குக் காரணமே அமைச்சரோ அல்லது அவரது அதிகாரத்தின் கீழ் செயல்படும் நபர்களோ தான்.

அமைச்சர் செல்வி. கீர்த்தனா மாணவியின் ஆங்கில மொழித் திறன் குறித்து அந்த இளம் மாணவியுடன் உரையாடியபோது இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. குழந்தைநேயக் கற்பித்தல் முறையின் உணர்விற்கு ஏற்ப மாணவியை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, அமைச்சர் அந்த ஆய்வில் கலந்து கொண்ட மற்றவர்களுக்கு முன்னிலையில் குழந்தையைக் கேலி செய்து ஏளனம் செய்தார். முன்வரிசை யில் தடுமாறும் மாணவர்களை “கடைசி பெஞ்ச்” மாணவர்களுடன் ஒப்பிட்டு அமைச்சர் கூறிய கருத்து, உளவியலாளர்கள் மற்றும் கல்வி வல்லுநர்களிடமிருந்து பலத்த எதிர்ப்பைக் கிளப்பியுள்ளது. பொதுச் சேவைக்காக இத்தகைய மிக உயர்ந்த பதவியை வகிக்கும் செல்வி. கீர்த்தனா, மாநிலம் மற்றும் நாட்டின் எதிர்காலமாக விளங்கும் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, சட்டத்தால் நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் கட்டமைப்புகளுக்கு இணங்க நடந்திருக்க வேண்டும்.



கீர்த்தனாவின் அதிகார துஷ்பிரயோகம்

அமைச்சர் செல்வி. கீர்த்தனா தனது அதிகார துஷ்பிரயோகம் மூலம், வெறும் சமூக ஊடகப் பரப்புவலுக்காக (traction) அப்பாவி குழந்தைகளைப் பயன்படுத்தியுள்ளார். அவரது செயல்கள் இளம் குழந்தைகளின் மனதில் கடுமையான எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. மைனர் மாணவி அமைச்சருடன் உரையாடுவதில் சிரமப்பட்டதற்குக் காரணம், அவரது அதிகாரபூர்வப் பதவியைக் கண்டு பயந்திருக்கலாம் அல்லது அவரைப் பதிவு செய்யும் கேமராக்களின் அசௌகரியத்தின் காரணமாகவும் இருந்திருக்கலாம். அமைச்சர் மாணவர்களிடையேஒருதாழ்வுமனப்பான்மையை உருவாக்க வழிவகுத்துள்ளார். மேலும் அவரது செயல்கள், இளம் குழந்தைகளிடையே ஆரோக்கியமான கற்றல் சூழலை மேம்படுத்துவதற்குப் பதிலாக, சக மாணவர்களிடையே பாகுபாடு மற்றும் ஒதுக்கிவைத்தல் போன்ற நிலைகளுக்குக் காரணமாக மாறியுள்ளன.

மாநில அமைச்சராகப் பொறுப்பு வகிக்கும் செல்வி. கீர்த்தனாவின் செயல்கள், 1992ல் இந்தியாவால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் குழந்தை உரிமைகள் உடன்படிக்கையின் (UNCRC) கீழ் இந்தியாவின் கடமைகளுக்கு முரணானவை ஆகும். மைனர் மாணவியுடன் பொதுவெளியில் தரக்குறைவாக நடந்துகொண்டதன் மூலமும், அதன் விளைவாகக் குழந்தையின் முகம், குரல் மற்றும் அடையாளம் பொதுமக்களுக்குத் தெளிவாகத் தெரியும்படி செய்ததன் மூலமும், ஒவ்வொரு குழந்தையின் கண்ணியம், தனியுரிமை, நலன் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட சர்வதேச கடப்பாடுகளுக்குப் புறம்பாக அமைச்சர் செயல்பட்டுள்ளார்.

ஊடகங்களில் குழந்தைகளைப் பற்றிச் செய்தி வெளியிடுவது குறித்த NCPCRன் வழிகாட்டுதல்கள், எந்தவொரு குழந்தையின் அடையாளமும் அவர்களுக்குத் தீங்கு, அவப்பெயர் அல்லது தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் வகையில் வெளிப்படுத்தப்படக் கூடாது என்று நிவர்த்திக்கின்றன. முகமூடி இடப்படாத (unmasked) காணொலியை வெளியிட்ட செல்வி. கீர்த்தனாவின் இந்த உணர்வற்ற செயல், இந்த வழிகாட்டுதல்களை நேரடியாக மீறுகிறது. மைனர் மாணவியின் அடையாளம் காணக்கூடிய உருவத்தைக் கொண்ட காணொலியைச் சமூக ஊடகத் தளங்கள் மூலம் மின்னணு முறையில் வெளியிடுவதும் பரப்புவதும், உணர்திறன் மிக்க தனிப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு மற்றும் குழந்தைகளின் இணையப் பாதுகாப்பு உள்ளிட்ட தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000ன் விதிகளுக்கு உட்பட்டதாகும்.

**மனரீதியான துன்புறுத்தல்!**

அமைச்சரின் செயல்கள் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சட்டபூர்வப் பாதுகாப்புகளுக்கும் முரணானவை. இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம் (RTE), 2009ன் பிரிவு 17, குழந்தைகளுக்கு ஏற்படும் மன உளைச்சல் அல்லது துன்பத்தை உண்டாக்கும் செயல்கள் உட்பட, குழந்தைகளுக்கு அளிக்கப்படும் உடல் ரீதியான தண்டனை மற்றும் மன ரீதியான துன்புறுத்தல்களைத் திட்டவட்டமாகத் தடை செய்கிறது. அதிகாரபூர்வப் பதவியில் இருக்கும் போது, மைனர் மாணவியைப் பொதுவெளியில் அவமானப்படுத்துவதும் கேலி செய்வதும், இந்தச் சட்டத்தின் அர்த்தப்படி மன ரீதியான துன்புறுத்தலாகும். மேலும், இளம் சிறார் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன் பிரிவு 74, சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படும் குழந்தைகள் மற்றும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் அடையாளத்தை குறிப்பாகப் பாதுகாத்தாலும், குழந்தைகளின் அடையாளம் மற்றும் கண்ணியம் பொதுவெளியில் வெளிப்படுத்தப்படக் கூடாது என்ற பரந்த சட்டக் கொள்கையையே அது பிரதிபலிக்கிறது. ஒரு தரக்குறைவான அதிகாரபூர்வ உரையாடலுக்குப் பிறகு, மைனர் மனுதாரரை அடையாளம் காட்டும் காணொளியை வெளியிடுவது இந்தச் சட்டப்பூர்வ உத்தரவுக்கு முரணானது மற்றும் அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அவரது கண்ணியம், தனியுரிமை, சமத்துவம், தனிநபர் சுதந்திரம் மற்றும் கல்விக்கான உரிமைகளை மீறுவதை வலுப்படுத்துகிறது.

இவற்றுடன், இந்திய அரசியலமைப்பின் 14, 15(1), 15(3), 21 மற்றும் 21A ஆகிய பிரிவுகளின் கீழ் மைனர் மாணவிக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை அரசியலமைப்பு உரிமைகளையும் அமைச்சர் மீறியுள்ளார். செல்வி கீர்த்தனா, மைனர் மாணவியின் கண்ணியத்தைப் பாதித்துள்ளார்; அவரது செயல்கள் குழந்தையின் கல்வித் தேடலை முடக்கியுள்ளன; மற்ற குழந்தைகளுக்கு மத்தியில் அவரைப் பாகுபாட்டுடன் நடத்தும் சூழலை உருவாக்கியுள்ளன மற்றும் அவரது தனிநபர் சுதந்திரத்தைப் பாதித்துள்ளன.

கேமராவின் முன்னிலையில் ஒரு குழந்தையின் திறன்களைப் பற்றி விவாதிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. மொழி என்பது வெறும் தொடர்புக்கான ஒரு ஊடகம் மட்டுமே. அது ஒருவரின் அறிவுத்திறன் அல்லது ஆற்றலின் அளவைக் குறிப்பதல்ல. அந்த மைனர் மாணவியால் ஆங்கிலத்தில் ஒரு எளிய வாக்கியத்தைக் கூடப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று வகுப்பறையில் இருந்த ஆசிரியருடன் வாதிட செல்வி. கீர்த்தனா பெரும் முயற்சி எடுத்தார். குழந்தைகளைக் கண்காணிக்கும் பெரியவர்கள், அவர்கள் முன்னிலையில் மரியாதையுடன் நடத்த வேண்டும். இத்தகைய சூழ்நிலையில், குழந்தைகளுக்குச் சரியான முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

மைனர் மாணவியை அமைச்சர் செல்வி. கீர்த்தனா பொதுவெளியில் கேலி செய்தது, ஒரு உணர்வற்ற மற்றும் தவறான செயலாகும். இது பாதிக்கப்பட்ட மாணவியின் நம்பிக்கையையும், இச்சம்பவத்தை நேரியலாகவோ அல்லது டிஜிட்டல் மூலமாகவோ பார்த்த பிற இளம் மாணவர்களின் நம்பிக்கையையும் மேலும் சிதைக்கக்கூடும். பொதுமக்கள் நலனுக்காகச் சேவை செய்ய வேண்டிய ஒரு பதவியில் இருந்து கொண்டு, இவ்வாறு நடந்துகொண்டது அந்தப் பதவியை முற்றிலும் அவமதிப்பதாகும்.

**மாணவிக்கு பின்வரும் பாதிப்புகள்!**

ஒரு அமைச்சர் குழந்தையைக் கேலி செய்யும் இந்த காணொலி வைரலாகப் பரவி வருவது, அந்த மைனர் மாணவிக்கு பின்வரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது மற்றும் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறது:

- கடுமையான மன மற்றும் உணர்ச்சி ரீதியான உளைச்சல், சங்கடம் மற்றும் அவமானம்;
- காணொலியின் பரவலான பரவல்காரணமாக, சக நண்பர்களால் அவப்பெயருக்குள்ளாதல் மற்றும் சாத்தியமான கொடுமைப்படுத்துதல்கள் (bullying);
- குழந்தையின் சுயமரியாதை மற்றும் தன்னம்பிக்கைக்கு ஏற்படும் உளவியல் ரீதியான பாதிப்பு, இது அவரது கல்வி உரிமையை நேரடியாகப் பாதிக்கிறது;
- குழந்தையின் தனியுரிமை, கண்ணியம் மற்றும் அடையாளப் பாதுகாப்பிற்கான உரிமையின் மீதான ஈடுசெய்ய முடியாத மீறல்.

செல்வி. கீர்த்தனாவின் நடத்தையின் தீவிரத்தன்மை பின்வரும் காரணிகளால் மேலும் அதிகரிக்கப்படுகிறது:

- அவர் ஒரு மாநில அமைச்சர், குடிமக்களின், குறிப்பாக மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரான குழந்தைகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க அரசியலமைப்பின்படி கடமைப்பட்டவர்.
- இச்சம்பவம் ஒரு அரசுப் பள்ளியில் அதிகாரபூர்வ மாநில ஆய்வின் போது நிகழ்ந்துள்ளது, இங்கு ஒவ்வொரு குழந்தைக்கும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு அளிக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது.
- அவரது நடத்தை, திட்டமிட்டு படம்பிடிக்கப்பட்டு பரப்பப்பட்டது போல் தோன்றுவது, அதிகாரத்தில் இருப்பவர்கள் குழந்தைகளை அவமானப்படுத்துவதை இயல்பாக்கும் ஒரு ஆபத்தான செய்தியைக் கடத்துகிறது.

**இணைய உள்ளடக்கத்தின் வைரல் தன்மை!**

- படம்பிடிக்கப்படுவதற்கோ, கேலி செய்யப்படுவதற்கோ அல்லது தனது உருவத்தைப் பொதுவெளியில் பரப்புவதற்கோ சம்மதம் தெரிவிக்கும் திறன் அந்தச் சிறுமிக்கு இல்லை. இணைய உள்ளடக்கத்தின் வைரல் தன்மை காரணமாக, இந்தத் தீங்கு தொடர்ச்சியானது மற்றும் மாற்றியமைக்க முடியாதது.

ஆகவே இதன் மீது உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு – அப்புகார் கடிதத்தில் சல்மா எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் உடல்நலம்குன்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வருகிறார் தகவல் அறிந்த முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு .நாசர் நேரில் சென்று நலம் விசாரித்தார். உடன் நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், எஸ்.ஜெயபாலன், ஜி.நாராயண பிரசாத், வழக்கறிஞர் பெ.வினோத் உள்ளனர்

# த.வெ.க. எம்.எல்.ஏ. சரவணனின் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது !

## முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. பேட்டி!

தூத்துக்குடி, ஜூலை 8-

திருவைகுண்டம் த.வெ.க. எம்.எல்.ஏ. வின் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது என த.வெ.க. எம்.எல்.ஏ. புகாருக்கு முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் மறுப்பு தெரிவித்துள்ளார்.

தன் மீதான பாலியல் குற்றச்சாட்டை மறைக்கவே முற்றிலும் தவறான தகவல்களை திருவைகுண்டம் த.வெ.க. எம்.எல்.ஏ. பேசி வருவதாக முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் குற்றம் சாட்டியுள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

உயிருக்கு பாதுகாப்பு இல்லை என திருவைகுண்டம் த.வெ.க. எம்.எல்.ஏ., சரவணன் கூறியதற்கு, யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் என தெரிவித்தார். ரூ. 50 கோடி பேரம் பேசியதாக வெளியான ஆடியோ குறித்து பேசிய அனிதா ராதாகிருஷ்ணன், தன்மீதான குற்றத்தை மறைக்கவே த.வெ.க. எம்.எல்.ஏ., சரவணன் தவறான குற்றச்சாட்டு களை கூறி வருவதாக குறிப்பிட்டார். நான் லாட்டரி வியாபாரம் செய்யவில்லை, கஞ்சா வியாபாரம் செய்யவில்லை என த.வெ.க. அமைச்சர்களை சாடினார்.

### தமிழக வரலாற்றில் அரசு வழக்கறிஞர்கள் இல்லாமல் நீதிமன்றங்கள் செயல்பட்டது கிடையாது!

# அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படாதது அரசு நிர்வாகத்தின் மிகப்பெரிய தவறு!

## அரசியலமைப்பு சட்டம் வகுத்திருக்கக்கூடிய விதிகள் மீறப்பட்டுள்ளன!

கோவை, ஜூலை 8 -

தமிழக வரலாற்றில் அரசு வழக்கறிஞர்கள் இல்லாமல் நீதிமன்றங்கள் செயல்பட்டது கிடையாது. அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படாதது அரசு நிர்வாகத்தின் மிகப் பெரிய தவறு, அரசியலமைப்பு சட்டம் வகுத்திருக்கக்கூடிய விதிகள் மீறப்பட்டுள்ளன என்று வழக்கறிஞர் கோபாலகிருஷ்ணன் பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

கோவை மாவட்டத்தில் அரசு வழக்கறிஞர்களை நியமிக்காததால் கடந்த 5 நாட்களில் 300 வழக்குகள் தேக்கமடைந்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த ஜூன் 30ம் தேதியுடன் அரசு வழக்கறிஞர்களின் பணிக் காலம் முடிவடைந்தது.

அதன்பின், ஒரு வாரம் ஆகியும் அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படாமல் உள்ளதால் வழக்குகள் தேக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், உடனே அரசு வழக்கறிஞர்களை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும் என வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், கோவை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வழக்கறிஞர் கோபாலகிருஷ்ணன் பத்திரிகையாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

சட்டமன்றத் தேர்தல் முடிந்து கடந்த 60 நாட்களாக உட்கட்சி பிரச்சினை, கட்சி தாவல், குதிரை பேரம், சோபா மாடல் போன்ற செய்திகள் மட்டுமே அதிகமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், நீதிமன்றத்தில் மிகப்பெரிய பிரச்சினை நிலவிவருகிறது. தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான கீழமை நீதிமன்றங்களில் அரசு வழக்கறிஞர்கள் கடந்த 5 நாட்களாக நியமிக்கப்படாததால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரானது.

தமிழக வரலாற்றில் அரசு வழக்கறிஞர்கள் இல்லாமல் நீதிமன்றங்கள் செயல்பட்டது கிடையாது. அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படாதது அரசு நிர்வாகத்தின் மிகப் பெரிய தவறு, இதனால் அரசியலமைப்பு சட்டம் வகுத்திருக்கக்கூடிய விதிகள் மீறப்பட்டுள்ளன. தற்போது கோவையில் 24 பேர் அரசு வழக்கறிஞர்களாக நியமிக்கப்பட உள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு உரிய அரசாணை இன்னும் வெளிவரவில்லை.

அரசு வழக்கறிஞர் இன்மையால் கோவை மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 5 நாட்களில் சுமார் 300க்கும் மேற்பட்ட பிணை வழக்குகள், சிவில் வழக்குகள் தேக்கமடைந்து இருக்கிறது. எனவே உரிய அரசாணை பிறப்பித்து அரசு வழக்கறிஞர்கள் விரைவில் நியமிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

### பல்லடம் அரசு மருத்துவமனையில்

# குடிநீர் இல்லாமல் தவிக்கும் நோயாளிகள்!

## உடனடியாக நடவடிக்கை எடுக்க கோரிக்கை!

திருப்பூர், ஜூலை 8 -

கோவை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் பல்லடம் அரசு மருத்துவமனை அமைந்துள்ளது. இங்கு தினமும் 800க்கும் அதிகமான புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் 90 உள் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

திருப்பூர் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக டிஜிட்டல் எக்ஸ்ரே, இசிஜி. கர்ப்பகால சிகிச்சை, குழந்தைகளுக்கான சிகிச்சை, தீவிர சிகிச்சை பிரிவு. அறுவை சிகிச்சை அரங்கு, கண் சிகிச்சை பிரிவு, கர்ப்பிணி பெண்களுக்கான நவீன ஸ்கேன் வசதி. பல் பரிசோதனை பிரிவு, சித்த மருத்துவம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் உள்ளன.

பல்லடம் அரசு மருத்துவமனைக்கு தினந்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட புறநோயாளிகள் வந்து செல்கின்றனர். நோயாளிகளை பார்க்க வரும் பொது மக்கள் என பலதரப்பட்ட மக்கள் வந்து செல்லும் இம் மருத்துவமனைக்கு போதிய அளவு குடிநீர் வினியோகம் கிடைப்பதில்லை. அதனால், மக்கள் அருகில் உள்ள கடைகளுக்கு சென்று குடிநீர் வாங்கி வந்து பயன்படுத்துகின்றனர். மருத்துவமனை நிர்வாகம் தங்களுக்கு கிடைக்கும் குடிநீரை பகிர்ந்து மக்களுக்கு வழங்கி வருகிறது.

அனைத்து வார்டுகளிலும் தேவையான இடங்களில் தூய்மையான குடிநீர் வழங்கிட இயந்திரம் உள்ளது.